21.08.2017

தினமலர்

**மழை பெய்ததால் உழவுபணி தீவிரம்: மானாவாரியில் விவசாயிகள்**

நிலக்கோட்டை:நிலக்கோட்டை தாலுகாவில் ஆடிப்பட்டத்தில் பெய்த மழையைப் பயன்படுத்தி மானாவாரி, பந்தல் விவசாயம் செய்வதற்கு உழவுப்பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். நிலக்கோட்டை தாலுகாவில் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட நஞ்சை, சோளம், கம்பு, உளுந்து, எள் உள்ளிட்ட புன்செய், அவரை, சுரை, பாகல், புடலை போன்ற பந்தல், சோளம், மொச்சை, தட்டாம் பயிறு உள்ளிட்ட மானாவாரி விவசாயம் செய்யப்படுகிறது .பூ விவசாயமும் இங்கு சிறப்பு பெற்றதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ பொய்த்ததால் மானாவாரி விவசாயம் கூட செய்ய முடியாமல் தவித்தனர் .கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காமல் பலர் விற்றனர் .பூ விவசாயம் செய்வோர் தண்ணீரை விலைக்கு பெற்று பாசனம் செய்தனர். மழை இல்லாமல் வைகை வறண்டது .மஞ்சளாறு, மருதாநதியும் கைகொடுக்கவில்லை . இதனால் நிலத்தடி நீர்மட்டம் அதள பாதாளத்திற்குச் சென்றது .குடிநீருக்கே மோசம் என்ற நிலை உருவானது .கடந்த ஒரு வாரமாக நிலக்கோட்டை தாலுகாவில் அவ்வப்போது மழை பெய்தது .இந்த வாய்ப்பை பயன்படுத்தி மானாவாரி, பந்தல் விவசாயம் செய்வதற்கு உழவு பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர் .ஆடிப்பட்டத்தில் மழை பெய்ததால் தொடர் மழை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இப்பணியில் ஈடுபடுவதாக மைக்கேல்பாளையம் விவசாயி ஆரோக்கியம் தெரிவித்தார்.

**தமிழகத்தில் நகர்ந்தது பருவமழை**

சென்னை :'சென்னை உட்பட தமிழகம் முழுவதும், சில இடங்களில் வெப்ப சலன மழைக்கு மட்டுமே வாய்ப்புள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடக்கு மற்றும் வட கிழக்கு மாநிலங்களில், ஜூலையில், தென் மேற்கு பருவமழை தீவிரமாக இருந்தது .ஆக., 10 முதல், தமிழகம், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில்

பரவலாக மழை பெய்தது .அதனால், தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளில், நீர்மட்டம் உயர்ந்தது .வறண்டு கிடந்த குளம், ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது.இந்நிலையில், 10 நாட்களாக பரவலாக கொட்டிய மழை, நேற்று முடிவுக்கு வந்துள்ளது .தென் மேற்கு பருவமழை, மீண்டும் வட மாநிலங்களுக்கு நகர்ந்து உள்ளது.'அடுத்த இரண்டு

நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு கனமழை எச்சரிக்கை இல்லை; சில இடங்களில் வெப்ப சலன மழைக்கு மட்டுமே வாய்ப்புள்ளது' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, தமிழகத்தில் அதிகபட்சமாக, வால்பாறையில், 6 செ.மீ., மழை பதிவாகி உள்ளது .சின்னக்கல்லார், 5; நடுவட்டம், வால்பாறை, பொன்னேரி, 3; பாபநாசம், தென்காசி, கடலார், செங்கோட்டை, போச்சம்பள்ளி, சீர்காழி, அரக்கோணம், செங்குன்றம் மற்றும் மயிலத்தில், 2 செ.மீ., மழை பெய்துள்ளது.

தினமணி

**இனிக்கும் கரும்பு... கசக்கும் வாழ்வு... கண்ணீரில் பரிதவிக்கும் விவசாயிகள்**



முப்போகம் சாகுபடி செய்த விவசாயிகள் இன்று ஒருபோக சாகுபடிக்கே அல்லாடும் நிலையில் இருக்கின்றனர். நெல் பயிரிட்ட விவசாயிகளின் வாழ்வாதார நிலை இப்படியிருக்க, கரும்பு விவசாயிகளின் கதை கண்ணீரை வரவழைக்கிறது.

தமிழகத்தில் தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து விவசாயிகளுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகை ஏறத்தாழ ரூ. 1850 கோடி. சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பையும் கொடுத்து , அதற்குரியத் தொகையை வாங்க இயலாமல் கண்ணீரில்

தவித்துக் கொண்டிருக்கின்றனர் கரும்பு விவசாயிகள். உலகிலேயே பிரேசில் நாட்டுக்கு அடுத்த அதிகளவில் கரும்பு உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது. இந்தியாவில் மொத்தம் 453 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இதில் , கூட்டுறவு நிறுவனங்கள் 252, தனியார் 134, பொதுத்துறை நிறுவனங்கள் 67 சர்க்கரை ஆலைகளை நடத்தி வருகின்றன. இந்திய அளவில் உத்தரப்பிரதேசம் , மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம் போன்ற மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் பிரதான இடத்தை வகித்து வருகின்றனர். தமிழகத்தில் சென்னையைத் தவிர விழுப்புரம் , திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, மதுரை, சிவகங்கை, கோவை, கரூரின் ஒருபகுதி, திருச்சி, அரியலூர்,பெரம்பலூர் உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்கள் கரும்பு பயிரிடும் பகுதியாக இருந்து வந்தன. கரும்பிலிருந்து சர்க்கரை முதல் பலவகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. எத்தனால் தயாரிப்பிலும் கரும்பின் பயன்பாடு அதிகம். பல்வேறு பலன்கள் இருந்தாலும் , கரும்புப் பயிரிட்ட விவசாயிகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்தவண்ணமாக இருக்கிறது.
விவசாயிகளின் நிலத்தில் கரும்பு பயிரிடும் போது தனியார் சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகள் காட்டிய வேகம் , நிலுவைத் தொகையை விவசாயிகளுக்குப் பெற்றுத் தருவதில் இருப்பதில்லை.
ஏறத்தாழ 42 லட்சம் டன் கரும்பு உற்பத்தி தமிழகத்தில் நடைபெற்று வந்த நிலையில் , தொடர் வறட்சி, சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை அதிகரிப்பு போன்றவைகளால் இந்த எண்ணிக்கை 7 லட்சம் டன்னாகக் குறைந்திருக்கிறது. கரும்புக்கு ஆதார விலையாக மத்திய அரசு டன் ரூ. 2300 என நிர்ணயம் செய்திருக்கிறது. இந்த விலையுடன் மாநில அரசின் பரிந்துரை விலை ( போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 100 உள்பட) ரூ. 550 என மொத்தமாக ரூ. 2850 ஆக உள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் மத்திய , மாநில அரசுகள் நிர்ணயித்த தொகைகளை விவசாயிகளுக்கு முழுமையாக சர்க்கரை ஆலைகள் வழங்கவில்லை.

மத்திய அரசு நிர்ணயித்த நியாயமான மற்றும் ஆதார விலையை மட்டும்தான் தருவோம். மாநில அரசின் பரிந்துரை விலைக்கான தொகையைத் தரமாட்டோம் , அப்படி தந்தாலும் பரிந்துரை விலையில் ரூ. 150 வரைதான் தருவோம் என்று பிடிவாதம் காட்டியதோடு நிலுவை வைத்ததால், இதுவரை சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 2000 கோடியாக இருந்தது. இதில் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள் ரூ. 150 கோடி வரை வழங்கிய

நிலையில், மற்றத் தொகை இதுவரையிலும் நிலுவைத் தொகையாகவே இருக்கிறது. சர்க்கரை விற்பனை விலையைக் காட்டிலும் உற்பத்திக்கும் ஆகும் செலவு அதிகரிப்பு , வரி மேல் வரியாகத் தொடர்ந்து விதிக்கப்படும் வரிகள் ,தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சர்க்கரையின் அளவு குறைவதால், எங்களால் மாநில அரசின் பரிந்துரை விலையை முழுமையாகத் தர முடியாத நிலையில் உள்ளோம் எனக் கூறி , விவசாயிகளுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகையைப் பிடித்தம் செய்யத்தொடங்கியதால் வந்த விளைவுதான் , தற்போது ரூ. 2000 கோடி நிலுவைத் தொகைக்கு காரணமாக அமைந்திருக்கிறது.

போக்குவரத்துச் செலவுக்கான தொகை ரூ. 100 போக மீதமுள்ள ரூ. 450 ல்- எங்களால் ரூ.100 மட்டும்தான் பரிந்துரை விலையாகத் தரமுடியும் என சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து பிடிவாதம் செய்து வருவதாலும் , சர்க்கரைத் துறை ஆணையர் கூட்டிய கூட்டங்களில் தங்களுக்கு ஆகும் செலவு குறித்த விவரங்களை மட்டும் தெரிவிக்கும் நிறுவனங்கள், விவசாயிகளுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகையைத் தருவதற்கான வழியைத் தெரிவிக்காமல் இருந்து வருகின்றன. மாநிலத் தொழில்துறை அமைச்சர்எம்.சி.சம்பத் தலைமையில் தொழில்துறைஅதிகாரிகள் , சர்க்கரை ஆலை பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள் சங்கங்கள் ஆகியவை பங்கேற்ற முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டாலும் தீர்வு ஏதும் கண்ட பாடில்லை. தொடரும் வறட்சியால் விவசாயிகள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வரும் நிலையில் , கடந்த 4 ஆண்டுகளாக நிலுவைத் தொகை வைத்திருக்கும் சர்க்கரை ஆலைகள் மீதும் நடவடிக்கை இல்லை. நிலுவைத் தொகையை பெற்றுத் தருவதற்கான தீவிர நடவடிக்கையும் இல்லை என்கிறார் தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே. ராஜ்குமார். மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா முதல்வராக இருந்த போதே இக்கோரிக்கை அவரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து அடுத்து முதல்வரான ஓ. பன்னீர்செல்வத்திடமும், தற்போதைய முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியிடமும் இப்பிரச்னை குறித்த விவரத்தை எடுத்துரைத்தோம். ஆனால், இதுவரை அதற்கான தீர்வு இதுவரை எட்டப்படவில்லை. சர்க்கரை ஆலைகள் முதலாளிகள், வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு சர்க்கரை அதிகளவில் இறக்குமதியாகிறது. தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை அளவு அதிகமாக இருந்தாலும் தேவை குறைவாக இருக்கிறது என்று ஏதேதோ காரணங்களைக் கூறுகின்றன . விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று

கூறுகிறார்கள். ஆனால் , தன் நிலத்தில் பயிரிட்ட கரும்புக்கான தொகையைப் பெறுவதற்காக பலநிலைகளில் போராடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். வாழ்வாதாரத்துக்காக பெரும் போராட்டம் நடத்தி வரும் விவசாயிகள், நிலுவைத் தொகையை பெற இன்னும் எத்தனை காலம்தான் போராட வேண்டியிருக்குமோ என்கிறார் கே. ராஜ்குமார்.

கடைநிலை நுகர்வோராக இருக்கும் நமக்கு சர்க்கரை இனிக்கத்தான் செய்யும். ஆனால் அதன் உற்பத்தி மூலப்பொருளான கரும்பை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு சர்க்கரை கசக்கிறது. ஆம். கரும்பை நட்டு , பராமரித்து அறுவடை செய்து சர்க்கரை ஆலைகளிடம் அளித்துவிட்டு , நிலுவைத் தொகைக்காக காத்திருக்கும் கரும்பு விவசாயிகளின் வாழ்க்கை கசப்பாகத்தான் இருக்கிறது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

## நீர்பிடிப்பு பகுதியில் தொடர்மழை : பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



கம்பம் :நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை பெய்து வருவதால், பெரியாறு அணைக்கு நீர்வரத்து 657 கன அடியாக அதிகரித்துள்ளது .152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி 113.40 அடி .நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை பெய்து வருகிறது .இதனால் நேற்று முன்தினம் வினாடிக்கு 455 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 657 கனஅடியாக அதிகரித்தது .நீர்

வெளியேற்றம் வினாடிக்கு 75 கனஅடியாக இருந்தது .அணையின் இருப்புநீர் 1459 மில்லியன் கனஅடியாக உள்ளது .71 அடி உயரமுள்ள வைகை அணையின் நீர்மட்டம் 29.23 அடியாக உள்ளது.

அணைக்கு நீர்வரத்து இல்லை .மதுரை குடிநீருக்காக 40 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது .அணையின் இருப்புநீர் 339 மில்லியன் கனஅடியாக உள்ளது . 57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 32.60 அடியாக இருந்தது . அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 23 கன அடியாக உள்ளது .நீர் வெளியேற்றம் இல்லை .இருப்புநீர் 100.78 மில்லியன் கனஅடி .126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் நேற்று 74.78 அடியாக இருந்தது .அணைக்கு நீர்வரத்து 6 கனஅடியாகவும், நீர்வெளியேற்றம் 3 கனஅடியாகவும் இருந்தது .அணையின் இருப்பு நீர் 34.19 மில்லியன் கனஅடியாக உள்ளது .பெரியாறு 15.4 மி.மீ, தேக்கடி 5.6 மி.மீ, கூடலூர் 3.6 மி.மீ, பாளையம் 2.6 மி.மீ, மழை பதிவாகி இருந்தது.

## உடல் வலி தொல்லையா? அன்னாசி பூ போதும்




நமக்கு அருகில், எளிதில் கிடைக்க கூடிய மூலிகைகள், இல்லத்தில் உள்ள உணவுப் பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள மருத்துவத்தை பார்த்து வருகிறோம் .அந்தவகையில், அன்னாசி பூவின் மருத்துவ குணங்களை பார்க்கலாம்.மசாலா பொருட்களில் ஒன்றான அன்னாசி பூ நாட்டு மருந்து கடை, மளிகை கடைகளில் கிடைக்கும் .உணவில் சுவை, மணத்துக்காக இது

சேர்க்கப்படுகிறது .அற்புதமான மருத்துவ குணங்களை கொண்டது .காய்ச்சலை தணிக்கும் தன்மை உடையது .அன்னாசி பூ மாதவிலக்கை முறைப்படுத்த கூடியது . இளம் தாய்மார்களுக்கு பால் பெருக்கியாக விளங்குகிறது .அன்னாசி பூவை மேல்பற்றாக போடும்போது வலி நிவாரணியாக விளங்குகிறது .புற்றுநோய் வராமல் தடுக்கிறது.

சளி இருமல் போக்க அன்னாசி பூவை பயன்படுத்தி காய்ச்சல், சளி, இருமலை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம் .தேவையான பொருட்கள் :அன்னாசி பூ, சீரகம், மிளகு, தேன்.செய்முறை :ஒரு பாத்திரத்தில் ஒரு டம்ளர் நீர் விடவும் .இதனுடன் வறுத்து பொடித்த அன்னாசி பூ பொடி அரை ஸ்பூன் அளவு சேர்க்கவும் .இதனுடன் அரை ஸ்பூன் சீரகம், 10 மிளகு தட்டி சேர்க்கவும் .இதை கொதிக்க வைத்து வடிகட்டி தேன் சேர்த்து காலை, மாலை குடித்துவர சளி, காய்ச்சல், இருமல் குணமாகும்.பல்வேறு நன்மைகளை கொண்ட அன்னாசி பூ நோய் எதிர்ப்பு சக்தி உடையது .நோய் நீக்கியாக விளங்குகிறது .நெஞ்சக சளி, இருமல், காய்ச்சல், உடல் வலிக்கு மருந்தாகிறது .பறவை காய்ச்சலை குணப்படுத்துகிறது.

ஈரல் கோளாறுக்கு மருந்து அன்னாசி பூவை பயன்படுத்தி, ஈரலை பற்றிய வைரஸ் நோய்களுக்கு மருந்து தயாரிக்கலாம் .தேவையான பொருட்கள் :அன்னாசி பூ, அதிமதுரப்பொடி, சித்தரத்தை, பனங்கற்கண்டு.செய்முறை :பாத்திரத்தில் ஒரு டம்ளர் நீர் எடுக்கவும் .இதில், அரை ஸ்பூன் அன்னாசி பூ பொடி, கால் ஸ்பூன் அதிரமதுர பொடி, கால் ஸ்பூன் சித்தரத்தை பொடி, சிறிது பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்க வைக்கவும் .இதை வடிகட்டி காலை, மாலை வேளைகளில், 100 மில்லி அளவுக்கு குடித்துவர ரத்தத்தில் உள்ள வைரஸ் குறையும் .கல்லீரல் நோய்களான ஹெபடிட்டிஸ் உள்ளிட்டவை குணமாகும் .நுண்கிருமிகளை அழிக்கும் .அக்கி நோய்க்கு மருந்தாகிறது.

வலி நிவாரணி தைலம் அன்னாசி பூவை பயன்படுத்தி வலி நிவாரணி தைலம் தயாரிக்கலாம் .தேவையான பொருட்கள் :அன்னாசி பூ, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய். செய்முறை :விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றை சம அளவு எடுக்கவும் .இதனுடன் அன்னாசி பூ பொடி சேர்த்து தைலமாக காய்ச்சவும் . இந்த தைலத்தை பூசிவர தசையில் ஏற்படும் வலி குணமாகிறது .தசை பிடிப்பை சரிசெய்கிறது .நெற்றியில் தடவும்போது மன இறுக்கத்தை போக்கும் .அன்னாசி பூ உணவுக்கு மணம் தருவதுடன் உடலுக்கு நலத்தையும் கொடுக்கிறது.

வாயுவை வெளியேற்ற கூடியது இது ஈரலை பலப்படுத்துகிறது .உன்னதமான அன்னாசி பூவை பயன்படுத்தி நலம் பெறலாம்.  நகச்சுற்றுக்கான மருத்துவம் குறித்து பார்க்கலாம் .நகத்தை பற்றிய கிருமிகளால் இப்பிரச்னை ஏற்படுகிறது .நகச்சுற்று மிகுந்த வலியை ஏற்படுத்தும்.

இந்த பிரச்னைக்கு டிசம்பர் பூ மருந்தாகிறது .டிசம்பர் பூ இலைகளை எடுத்து அரைத்து பற்றாக போடும்போது நகச்சுற்று குணமாகும் .வலி விலகிப்போகும்.